# மாபெரும் கட்டளைக்கான கையேடு



போய் சீஷராக்குங்கள்
மத்தேயு 29:19

## பொருளடக்கம்:


**மாபெரும் கட்டளைக்கான கையேடு ............Error! Bookmark not defined.**

1. மாபெரும் கட்டளை என்றால் என்ன? ....... 3
2. மாபெரும் கட்டளையைக் குறிப்பிடும் வேதப்பகுதிகள் ....... 3
3. மாபெரும் கட்டளையின் மகிமையான நிறைவு என்ன? ....... 3
4. சீஷன் என்பவன் யார்? நாம் எப்படி சீஷர்களை உருவாக்க முடியும்? Error! Bookmark not defined.
5. மாபெரும் கட்டளையின் பணி நிறைவேற்றப்பட்டபின் எப்படி இருக்கும்?.......Error! Bookmark not defined.
6. மாபெரும் கட்டளையின் பணியை நிறைவேற்றி முடிக்க நமக்கு என்ன தேவை? .......Error! Bookmark not defined.
7. மாபெரும் கட்டளையை நிறைவேற்றுவதில் நான்கு நிலங்களின் அணுகுமுறை என்ன? .......Error! Bookmark not defined.
8. மாபெரும் கட்டளையை நிறைவேற்றுகிற தரிசனத்தின் ஒன்பது படிகள். ....... 6
9. காலியான நிலங்கள் யாவை? ....... 6
10. காலியான நிலங்களை நாம் எவ்வாறு ஆயத்தப்படுத்த முடியும்? Error! Bookmark not defined.
11. ஜெப நடை என்றால் என்ன? ....... 8
12. ஜெபநடையை நான் எவ்வாறு மேற்கொள்ள முடியும்?....... 8
13. நாம் விதைகளை எவ்வாறு விதைக்க வேண்டும்? நான் எவ்வாறு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளவேண்டும்? ....... 9
14. சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளும்போது கேட்பதற்கான சில மாதிரிக் கேள்விகள் ....... 13
15. ஒரு நபர் எவ்வாறு இரட்சிக்கப்படமுடியும்? ....... 13
16. சுவிசேஷத்தை அறிவிக்கும்போது பகிர்ந்துகொள்வதற்கான சில மாதிரி அறிக்கைகள் ....... 13
17. ஒரு நபரை நான் எப்படி இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வழிநடத்தமுடியும்? ....... 14

**18. ஒரு நபர் இரட்சிக்கப்பட்ட உடனேயே நான் எவைகளைக் கற்றுக்கொடுக்கவேண்டும்?** ........ 15
**19. இயேசு கிறிஸ்துவின் ஏழு கட்டளைகள் யாவை?** ........ 16
**20. நீண்டகால சீஷத்துவம் என்றால் என்ன?** ........ 17
**21. திருச்சபைகளை நிறுவுதல்** ........ **Error! Bookmark not defined.**
**22. தலைவர்களை உருவாக்குதல்:** ........ **Error! Bookmark not defined.**
**23. திருச்சபை நிறுவும் இயக்கம் என்றால் என்ன?** ........ 25
**24. சீஷர்களை உருவாக்கும் இயக்கம் என்றால் என்ன?** ........ 26
**25. சீஷர்களை உருவாக்குதல் என்றால் என்ன?** ........ 26
**26. மாபெரும் கட்டளையின் பணி நிறைவேற்றி முடிக்கப்பட்டபின் எப்படி இருக்கும் ?** ........ 27
**27. மாபெரும் கட்டளையை நிறைவேற்றுதல் குறித்த எளிமையான விளக்கங்கள்:** ........ 28
**28. மாபெரும் கட்டளையின் பணியை நிறைவேற்றி முடிக்கமுடியுமா?** ........ 28

# மாபெரும் கட்டளையைக் குறித்த கையேடு

## 1. மாபெரும் கட்டளை என்றால் என்ன?

a. இது இயேசு கிறிஸ்து கொடுத்த கடைசிக் கட்டளையாகும்

## 2. மாபெரும் கட்டளையைக் குறிப்பிடும் வேதப்பகுதிகள் யாவை?

படித்து மனப்பாடம் செய்யுங்கள்.

a. மத்தேயு 28:18-20
b. மாற்கு 16:15
c. மாற்கு 13:10
d. லூக்கா 24:47
e. யோவான் 20:21
f. அப்போஸ்தலர் நடபடிகள் 1:8

**3. மாபெரும் கட்டளையின் மகிமையான நிறைவு என்ன?**

a. மத்தேயு 24:14
b. வெளிப்படுத்தல் 7:9
c. வெளிப்படுத்தல் 5:9
d. தானியேல் 7:14

**4. சீஷன் என்பவன் யார்? நாம் எப்படி சீஷர்களை உருவாக்க முடியும்?**

சீஷன் என்பவன் இயேசுவைக் கீழ்ப்படிதலுடன் பின்பற்றி மற்றவர்களையும் சீஷர்களாக மாற்றுகிறவன் ஆவான். இயேசு கிறிஸ்து கட்டளையிட்ட அனைத்திற்கும் அவர்கள் கீழ்ப்படியும்படி போதிப்பதன்மூலம் நாம் அவர்களை சீஷர்களாக மாற்றுகிறோம். இதில், சுவிசேஷத்தைப் பகிர்தல், இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி அவர்களுக்குப் போதித்தல், மற்றும் வேதாகமத்திலுள்ள மற்ற போதனைகள், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி திருச்சபையாகக் கூடிவந்து கர்த்தரை ஆராதிக்கும் உண்மையுள்ள சீஷர்களின் சமுதாயத்தை நிறுவுதல் ஆகியவை அடங்கும்.

**5. மாபெரும் கட்டளையின் பணி நிறைவேற்றப்பட்டபின் எப்படி இருக்கும்?**


a. ஒரு நபரும் விடுபட்டிருக்கமாட்டார்கள் (2 பேதுரு 3:9, 1 தீமோத்தேயு 2:4)
b. ஒரு இடமும் விடுபட்டிருக்காது (ரோமர் 15:19-23)
c. ஒரு மொழியும் வேதாகமம் இல்லாமல் விடுபட்டிருக்காது (தானியேல் 7:14)
d. ஒரு மக்களினமும் விடுபட்டிருக்காது (மத்தேயு 28:19)

6. **மாபெரும் கட்டளையின் பணியை நிறைவேற்றி முடிக்க நமக்கு என்ன தேவை?**
    a. வல்லமை நிறைந்த ஜெபம் 1 நாளாகமம் 14:11 (பாகால்பிராசீம் ஜெபம்)
    b. ஒன்றிணைந்து செயல்படுதல் – ஐக்கியம் (யோவான் 17: 11, லூக்கா 5:7)
    c. இயக்கங்களின் இயக்கங்கள் (அப்போஸ்தலர் 6:7, அப்போஸ்தலர் 9:31)

7. **மாபெரும் கட்டளையை நிறைவேற்றுவதில் நான்கு நிலங்களின் அணுகுமுறை என்ன?**

    ***மாற்கு 4:26-29ஐப் படியுங்கள்***

    ***a. நான்கு வகையான நிலங்கள் யாவை?***




- காலியான நிலம் – நிலத்தை ஆயத்தப்படுத்துங்கள்- சுவிசேஷ ஆயத்தம் (சுவிசேஷம் அறிவித்தலுக்கு முந்தைய நிலை)
- விதைக்கப்பட்ட நிலம் – சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் – சுவிசேஷம் அறிவித்தலை நடைமுறைப்படுத்துதல் (சுவிசேஷம் அறிவித்தல்)

- வளருகின்ற நிலம் - சீஷத்துவம் – (சுவிசேஷ முதிர்ச்சி)
- அறுவடைக்கு தயாரான நிலம் – திருச்சபை நிறுவுதல் (சுவிசேஷத் தாக்கம்)

***b. ஒரு விவசாயி தனது நிலத்தை அறுவடை செய்தபின்பு என்ன செய்வான்?***

i) மறுவிதைப்பிற்காக சிறந்த தரமான விதைகளைத் தேர்ந்தெடுப்பான் (தலைமைத்துவப் பயிற்சி)

ii) விதைகளின் பெருக்கம் – சுவிசேஷப் பெருக்கம் (சுவிசேஷ இயக்கங்கள்)

**8. மாபெரும் கட்டளையை நிறைவேற்றுகிற தரிசனத்தின் ஒன்பது படிகள்.**




**9. காலியான நிலங்கள் யாவை?**

a) காலியான மக்கள்(நண்பர்கள், உறவினர்கள், சகமனிதர்கள், அண்டை வீட்டார்)

b) காலியான இடங்கள் (கிராமங்கள், நகரங்கள், அருகிலுள்ள பகுதிகள்)

10. **காலியான நிலங்களை நாம் எவ்வாறு ஆயத்தப்படுத்த முடியும்?**

   a. **திறக்கும் ஜெபம்** – இருதயம் திறக்கப்படுதல், வீடுகள் திறக்கப்படுதல், கண்கள் திறக்கப்படுதல், காதுகள் திறக்கப்படுதல், பரலோகம் திறக்கப்படுதல்

   b. ஆசீர்வாத ஜெபம் – சரீரத்திற்காக, வேலைக்காக, உணர்வுகளுக்காக, சமுதாய தேவைகளுக்காக மற்றும் ஆவிக்குரிய தேவைகளுக்காக ஜெபித்தல் (**BLESS prayer -** Pray **for B**ody, **L**abour, **E**motions, **S**ocial life, and **S**piritual life).

**ஜெபத்தின் மூலமாக மக்களின் இருதயங்களை ஆயத்தப்படுத்துதல்.**

   c. ***FRAN ஜெபம் என்றால் என்ன?***

   நண்பர்கள், உறவினர்கள், சகமனிதர்கள், அண்டைவீட்டார் (**F**riends, **R**elatives. **A**ssociates, **N**eighbours) (விசுவாசிகளல்லாத 5 அல்லது அதற்கு மேற்பட்ட நண்பர்கள், உறவினர்கள், சகமனிதர்கள், அண்டைவீட்டார் பெயர்களை எழுதி, அவர்களுக்காக திறக்கும் ஜெபம் மற்றும் ஆசீர்வாத ஜெபம் ஆகியவற்றை ஏறெடுத்தலாகும். திருச்சபைகள் இல்லாத காலியான இடங்களுக்காக ஜெபத்தின் மூலமாகவும் ஜெபநடை மேற்கொள்ளுவதின் மூலமாகவும் ஆயத்தப்படுத்துங்கள்.

My commitment for prayer Name:____________

| # | FRIENDS | RELATIVES | ASSOCIATES | NEIGHBOURS |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |

| # | FRIENDS | RELATIVES | ASSOCIATES | NEIGHBOURS |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |

11. **ஜெபநடை என்றால் என்ன?**

ஜெபநடை என்பது அருகிலுள்ள பகுதிகளில் அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஜெபித்துக்கொண்டே நடந்துசெல்லுகின்ற மன்றாட்டு ஜெபத்தின் ஒரு வகையாகும். நீங்கள் ஜெபநடை மேற்கொள்ளும்போது, அந்தப் பகுதிகளின் தேவைகளை நேரடியாகக் காணமுடிகிறது. மேலும் அந்தப் பகுதிகளை தேவனுடைய கண்கள் மற்றும் இருதயம் ஆகியவற்றின் மூலம் காணும்போது அந்தப்பகுதிகளைக் குறித்த கரிசனை அதிகரித்து நமது ஜெபத்தை வல்லமையுள்ளதாக்குகிறது. நீங்கள் ஜெபநடை மேற்கொண்ட பகுதிகளில் தேவன் சுவிசேஷத்திற்கான வாசல்களைத் திறப்பார். ஜெபநடையானது நாம் அந்தப் பகுதிகளை நன்கு புரித்துகொள்ளவும், அங்கு இருக்கும் வாய்ப்புக்கள் மற்றும் சவால்களை அறிந்துகொள்ளவும் உதவுகிறது.

12. **நான் எப்படி ஜெபநடை செல்லவேண்டும்?**

   a. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைக் கொண்ட குழுவை உருவாக்குங்கள்.
   b. ஆவிக்குரிய நிலையில் ஆயத்தமாகுங்கள். பரிசுத்த ஆவியானவருடைய சத்தத்திற்குக் கவனமாக செவிகொடுங்கள்.
   c. இடங்கள் மற்றும் அங்குள்ள மக்களின் தேவைகளை அறிந்துகொள்வதில் கவனமாக இருங்கள்.

d. திறக்கும் ஜெபத்தை செய்யுங்கள். (கதவுகள், கண்கள், காதுகள், இருதயங்கள், பரலோகம் ஆகியவை திறக்கும்படியாக ஜெபியுங்கள்)
e. அந்த இடங்கள் மற்றும் அங்குள்ள மக்களின் மீது சமாதானத்தையும் ஆசீர்வாதங்களையும் கூறுங்கள்.
f. சமாதானப் புருஷன் (சமாதானப் பாத்திரன்)க்காக ஜெபித்து அவர்களைக் கண்டறியுங்கள்.

**13. நாம் விதைகளை எவ்வாறு விதைக்க வேண்டும்? நான் எவ்வாறு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளவேண்டும்?**

**a. நான் என்னுடைய FRAN நபர்களுக்காக ஜெபித்தபின் நான் என்ன செய்யவேண்டும்?**
- அவர்களுடைய கதை, அவர்களுடைய பிரச்சனைகள், அவர்களுடைய வாழ்க்கை சூழ்நிலைகள், மற்றும் அவர்களுடைய சவால்கள் ஆகியவற்றைக் கூர்ந்து கேளுங்கள்.
- உங்களுடைய கடினமான மற்றும் சவாலான நேரங்களில் இயேசு எவ்வாறு உங்களுக்கு உதவிசெய்தார் என்பதை அவர்களிடம் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- அவர்களது சூழ்நிலைக்குப் பொருத்தமான தேவனுடைய கதையை அல்லது இயேசுவின் கதையை அவர்களிடம் பகிர்ந்துகொள்ளுங்கள்.

**b. விதை என்பது என்ன?**
விதை என்பது இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் ஆகும்.

**c. சுவிசேஷம் என்றால் என்ன?**
“2000 ஆண்டுகளுக்கு முன், வேதவாக்கியங்களின்படி, தேவன் இயேசுவை

இந்த உலகத்திற்கு அனுப்பினார். அவர் பாவமில்லாத வாழ்க்கை வாழ்ந்தார், அவர் முடவர்கள், குருடர்கள், காதுகேளாதவர்கள், குஷ்டரோகிகள் முதலானோரைக் குணமாக்கினார். மரித்தவர்களை உயிரோடு எழுப்பினார். அவர் கல்வாரியில் சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார். அவர் பரலோகத்திற்கு ஏறிச் சென்றார், தாம் வாக்குரைத்தபடியே மீண்டும் வருவார். அவருடைய நாமத்தில் பாவமன்னிப்பும் இரட்சிப்பும் உண்டு."

d. **யாரெல்லாம் சுவிசேஷத்தைப் பகிரமுடியும்?**
மறுபடியும் பிறந்த அனைவருமே அதற்குத் தகுதியானவர்கள். மேலும் அவர்கள் கட்டாயமாக சுவிசேஷத்தை விதைக்கிறவர்களாக இருக்கவேண்டும். (மாற்கு 1:17)

e. **ஒரு புதிய விசுவாசி எப்போது சுவிசேஷத்தை அல்லது தனது விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ள ஆரம்பிக்கமுடியும்?**
கீழ்க்கண்ட கதைகளில் கூறப்பட்டுள்ள நபர்களைப் போலவே உடனடியாகத் துவங்கமுடியும்
   - *சமாரிய ஸ்திரீயின் கதை (யோவான் 4:5-30)*
   - *பிசாசு பிடித்திருந்த மனிதனின் கதை (மாற்கு 5:1-20)*
   - *ஊமையும் செவிடுமாயிருந்த மனிதனின் கதை (மாற்கு 7:31-37)*

**f. நான் யாருக்கெல்லாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள முடியும்?**

உங்களுடைய நண்பர்கள், உறவினர்கள், சகமனிதர்கள், அண்டைவீட்டார் ஆகியோரிடம் சுவிசேஷத்தைப் பகிரலாம். மேலும் நாம் ஜெபத்தினால் யாருடைய இருதயத்தை ஆயத்தம் பண்ணியிருக்கிறோ அவர்களிடம் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துகிறபடி பகிரலாம்.

**g. நான் என்னுடைய தனிப்பட்ட சாட்சி அல்லது கதையை எப்படி ஆயத்தம் செய்யவேண்டும்?**

கீழ்கண்ட கேள்விகளுக்கு பதில்களை எழுதுங்கள் அல்லது பதிவு செய்யுங்கள்:

i. **இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக உங்களது வாழ்க்கை எப்படியிருந்தது?** (Sin, பாவம், வியாதி, வறுமை, பிசாசினால் கட்டப்பட்டிருத்தல், அடிமைத்தனம் முதலியன மேலும் அவைகளினால் உங்களது வாழ்க்கையில் ஏற்பட்ட தாக்கம் அல்லது விளைவுகள்)

ii. **உங்களது வாழ்க்கையில் இயேசுவை எப்படி ஏற்றுக்கொண்டீர்கள்?**
   - யார் உங்களுக்கு இயேசுவைக்குறித்துக் கூறினார்கள்?
   - இயேசுவை ஏற்றுக்கொள்ள எப்போது முடிவெடுத்தீர்கள்?
   - உங்களது சூழ்நிலையை விளக்கிக் கூறுங்கள்.

iii. **உங்களது வாழ்க்கையில் இயேசுவை ஏற்றுக்கொண்டபின் என்ன நடந்தது?**

- வியாதியிலிருந்து சுகம், விடுதலை, பாவத்திலிருந்து மன்னிப்பு, கெட்ட பழக்கவழக்கங்கள் மாறுதல், சமாதானம் உண்டாகுதல் முதலியன.
- கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதலுள்ள சீஷனாக மாறுதல்.

h. **உங்களது கதையை உங்களது FRAN நபர்களிடம் பகிர்ந்துகொள்ளத் துவங்குங்கள்; தேவைப்பட்டால் மாறுதல்களைச் செய்துகொள்ளலாம்.**

14. **சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளும்போது கேட்பதற்கான சில மாதிரிக் கேள்விகள்.**
    a. நீங்கள் மறுபடியும் பிறந்துவிட்டீர்கள் என்ற நிச்சயம் இருக்கிறதா?
    b. இன்று நீங்கள் மரித்துவிட்டால் நீங்கள் எங்கு செல்வீர்கள் என்று தெரியுமா?
    c. உங்களது நித்தியத்தை எங்கு கழிப்பீர்கள்? பரலோகத்திலா அல்லது நரகத்திலா?

15. **ஒரு நபர் எவ்வாறு இரட்சிக்கப்படமுடியும்?**
    a. “கர்த்தரே ஆண்டவர்” என்று உங்களது வாயினால் அறிக்கை செய்து, தேவன் இயேசுவை மரணத்திலிருந்து எழுப்பினார் என்பதை உங்களது இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவீர்கள்; (ரோமர் 10:9)
    b. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். (யோவான் 1:12)

16. **சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளும்போது பகிர்ந்துகொள்வதற்கான சில மாதிரி அறிக்கைகள்?**
    a. இயேசு உன்னை நேசிக்கிறார்.
    b. இயேசு உன்மீது அக்கறையாக இருக்கிறார்.
    c. இயேசுவை நம்பு.

d. இயேசுவால் உன்னை இரட்சிக்க முடியும்.
e. இயேசு உன்னை சுகமாக முடியும்.
f. இயேசு மீண்டும் வருவார்.
g. இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படு.
h. இயேசு உனக்கு சமாதானம் தரமுடியும்.
i. இயேசுவால் உன் பாவங்களை மன்னிக்கமுடியும்.
j. இயேசு உனது வாழ்க்கையை மாற்ற முடியும்.

**17. ஒருநபரை நான் எவ்வாறு இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வழிநடத்தமுடியும்?**

a. மிக எளிமையான மொழியில் அல்லது வார்த்தைகளில் சுவிசேஷத்தை மிகத் தெளிவாகக் கூறுங்கள்.
b. சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொண்டபின்பு இயேசுவை ஏற்றுக்கொள்ள அழைப்புக் கொடுங்கள்.
c. சுவிசேஷ அழைப்புக்கான மாதிரிக் கேள்விகள்.
   - இயேசுவை உங்களது ஆண்டவராகவும் சொந்த இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா?
   - இல்லை என்று கூறினால், ஆசீர்வாத ஜெபத்தை ஏறெடுங்கள்..
   - ஆம் என்று கூறினால், அந்த நபரை அறிக்கையிடுதலின் ஜெபத்தில் வழிநடத்துங்கள்.
d. அறிக்கையிடுதலின் ஜெபத்தின் மாதிரி.
   ஆண்டவராகிய இயேசுவே, நான் ஒரு பாவி என்றும், எனது வாழ்க்கையில் அநேக தவறான காரியங்களைச் செய்திருக்கிறேன் என்றும் அறிக்கையிடுகிறேன். நீர் இந்த உலகத்திற்கு

வந்தீர் என்றும், சிலுவையில் எனக்காக மரித்தீர் என்றும் அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தீர் என்பதையும் நான் நம்புகிறேன். நீர் வாக்குரைத்தபடி மீண்டும் வருவீர் என்றும் நம்புகிறேன். உம்முடைய நாமத்தில் இரட்சிப்பும் பாவமன்னிப்பும் உண்டு என்பது நம்புகிறேன். ஆண்டவராகியே இயேசுவே, என் வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், உம்முடைய இரத்தத்தினால் என்னைக் கழுவும். இன்று முதல் நான் உமக்காக வாழுவேன். நான் என் வாழ்க்கையில் நான் உம்மை என் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே.. ஆமென்

18. **இரட்சிக்கப்பட்ட புதிய விசுவாசிக்கு நான் என்ன கற்றுக்கொடுக்கவேண்டும்? (உடனடி சீஷத்துவம்)**
    a. ***இரட்சிப்பின் நிச்சயத்தை பெற்றுக்கொள்ள வழிநடத்துங்கள்.***
        - நீ இப்போது தேவனுடைய பிள்ளையாக மாறிவிட்டாய் (யோவான் 1:12)
        - உனது பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன (1 யோவான் 1:9)
        - உனது பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டுவிட்டது. (வெளிப்படுத்தல் 21:27)
        - நீ மறுபடியும் பிறந்தவன் (யோவான் 3:3)

    b. ***பரலோகத் தகப்பனுடன் பேசுவதுபோன்ற எளிமையான ஜெபங்களை எவ்வாறு ஜெபிப்பது என்று அவர்களுக்குக் கற்பியுங்கள்.***
    c. ***கர்த்தருடைய ஜெபம் மிக நல்ல எடுத்துக்காட்டாகும். (மத்தேயு 6:9-13)***

d. ***வேதாகமத்தைப் படிப்பதற்கும் தியானிப்பதற்கும் அவர்களுக்குக் கற்பியுங்கள்.***

e. ***சாட்சி சொல்ல அவர்களுக்குக் கற்பியுங்கள்.***

இயேசு அவர்களது வாழ்க்கையில் செய்தவைகளை உடனடியாகத் தங்களது நண்பர்கள், உறவினர்கள், சகமனிதர்கள் மற்றும் அண்டை வீட்டார் ஆகியோரிடம் பகிர்ந்துகொள்ளும்படி உற்சாகப்படுத்துங்கள்.

f. ***விசுவாசிகளின் சமூகத்தில் அல்லது உள்ளூர் திருச்சபையில் பங்குபெறும்படி அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.***

*அவர்கள் வசிக்கும் பகுதிகளில் திருச்சபைகள் இல்லாவிட்டால், அவர்களுடைய வீட்டிலேயே புதிய திருச்சபையைத் துவங்க அவர்களுக்கு ஊக்கமளித்து பயிற்சி கொடுங்கள்.*

**19. இயேசு கிறிஸ்துவின் ஏழு கட்டளைகள் யாவை? (குறுகிய கால சீஷத்துவம்)**

கட்டளைகளை மிக விவரமாகக் கற்றுக்கொடுக்கும்போது உறுதுணையாக வேதாகமக் கதையைப் போதியுங்கள்.

a. **மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள். (மாற்கு 1:15)**
   - *கெட்ட குமாரன் (லூக்கா 15:11-32)*

b. **பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் மேலும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் (மாற்கு 16:16)**
   - *பிலிப்பு மற்றும் கந்தாகே ராஜஸ்திரீயின் மந்திரி (அப்போஸ்தலர் 8:26-40)*

c. **தேவனை நேசியுங்கள் மற்றும் அயலாகத்தாரை நேசியுங்கள் (மத்தேயு 22: 37-39)**
   - *நல்ல சமாரியனின் கதை (லூக்கா 10:25-37)*

d. **கிரமமாக ஜெபித்து தேவனுடைய வார்த்தையை வாசியுங்கள். (யோவான் 15:7)**
   - *வற்புறுத்திக் கேட்கும் நண்பனின் கதை (லூக்கா 11: 5 - 8)*

e. **கர்த்தருடைய பங்குபெற்று, பரிசுத்த வாழ்க்கையை வாழுங்கள்  மேலும் விசுவாசிகளின் சமூகத்தில் அதாவது உள்ளூர் திருச்சபையில் பங்குபெறுங்கள். (லூக்கா 22:19)**
   - *கர்த்தருடைய பந்தியைக் குறித்த கதை (லூக்கா 22: 14-23)*

f. **தசமபாகத்தையும் காணிக்கையையும் செலுத்துங்கள் (அப்போஸ்தலர் 20:35)**
   - *விதவையின் காணிக்கையைக் குறித்த கதை (லூக்கா 21:1-4)*

g. **புறப்பட்டுப் போங்கள் மற்றும் சீஷராக்குங்கள். (மத்தேயு 28:19)**
   - *அந்திரேயா மற்றும் அவனது நண்பர்களைக் குறித்த கதை (யோவான் 1: 43-50)*

**20. நீண்டகால சீஷத்துவம் என்றால் என்ன?**

ஒரு விசுவாசிக்கு பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டும் அடங்கிய தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதன்மூலம் கிறிஸ்துவுக்குள் பலமுள்ளவராகவும் முதிர்ச்சியுள்ளவராகவும் ஆக்குதலாகும்.

**a. அப்போஸ்தலருடைய போதனையிலிருந்து துவங்குங்கள் (அப்போஸ்தலர் 2: 42-47)**

- அப்போஸ்தலருடைய உபதேசங்கள்
- ஐக்கியம்
- அப்பம் பிட்குதல்
- ஜெபம், துதி, மற்றும் ஆராதனை
- அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள்
- ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளுதல்

**b. அப்போஸ்தலருடைய போதனைகள் (5 விரல் கோட்பாடுகள்)**

***தனிப்பட்ட வாழ்க்கை:*** *பரிசுத்தம், உண்மை, நேர்மை*

***குடும்ப வாழ்க்கை:*** *கணவன், மனைவி, பிள்ளைகள் மற்றும் பெற்றோர் ஆகியோருடனான உறவு*




***திருச்சபை வாழ்க்கை:*** *குடும்பமாகிய திருச்சபைக்குள்ளான வாழ்க்கை*

***சமுதாய வாழ்க்கை:*** *அரசாங்க சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிதல், அரசாங்கத்திற்காக ஜெபித்தல், அவர்களை ஆசீர்வதித்தல்.*

***நித்திய வாழ்க்கை:*** *இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் மரணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கை.*

**c. வேதாகமக் கதைகள் மூலம் சீஷத்துவம்**

**i. இது என்ன சொல்கிறது?**

கதையைக் கேட்பவர்கள் அந்தக் கதையை மற்றவர்களுக்குச் சொல்லக்கூடியவர்களாக

மாறும்வரை வேதாகமக் கதையை மிகத் தெளிவாக விளக்கமாக விவரியுங்கள். தேவைப்பட்டால் சைகைகள், பாடல்கள், நாடகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துங்கள்.

ii. **இதன் அர்த்தம் என்ன?**
இதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளுங்கள்.

iii. **நான் எவைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும்?**
கீழ்ப்படிவதற்கும், மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்வதற்கும் உற்சாகப்படுத்துங்கள்.

iv. **வேதாகமக் கதைகளைப் புரிந்துகொள்வதற்கு பட்டய முறை அல்லது கேள்வி முறை.**

- இது தேவனைக் குறித்து என்ன கூறுகிறது?
- இது மனிதனைக் குறித்து என்ன கூறுகிறது?
- கீழ்ப்படியவேண்டிய கட்டளை உள்ளதா?
- விட்டுவிட வேண்டிய பாவம் உள்ளதா?
- சுதந்தரிக்கவேண்டிய வாக்குத்தத்தங்கள் இருக்கிறதா ?
- பின்பற்றவேண்டிய முன்மாதிரிகள் இருக்கிறதா?
- இந்தக் கதையில் நான் கற்றுக்கொள்ளவேண்டிய வேறு காரியம் ஏதேனும் இருக்கிறதா?
- நான் யாருக்கெல்லாம் இக்கதையைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்?

**d. வேதாகமக் கதைகளைக் கற்பித்தல்/கலந்துரையாடல் மற்றும் டிஸ்கவரி பைபிள் ஸ்டடீஸ் (DBS) ஆகியவைகளைப் பயன்படுத்தும் வேதாகமப் பகுதிகள்.**

வேதபாடக் குழுக்களுக்கான மாதிரி கலந்துரையாடல்

**i. பின்னோக்கிப் பாருங்கள்:**

***தனிப்பட்ட காரியங்களைப் பகிர்தல்***

- நீங்கள் எவைகளுக்கெல்லாம் நன்றி சொல்ல வேண்டும்?
- நீங்கள் சந்தித்த சவால்கள் என்ன?
- ஒருவருக்கொருவர் தேவைகளுக்காக ஜெபித்தல் மற்றும் ஒருவருக்கொருவர் உதவிசெய்தல்.

***கடந்த வார பாடத்தைப் பகிர்தல்***

- கடந்த வாரத்தில் நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?
- கற்றுக்கொண்ட பாடத்தின் அடிப்படையில் நீங்கள் எந்தக் காரியங்களுக்குக் கீழ்ப்படிந்தீர்கள்?
- நீங்கள் கற்றுக்கொண்ட காரியங்களை யாருக்குக் கற்பித்தீர்கள்?

**ii. மேல்நோக்கிப் பாருங்கள்:**

- இன்றைய பாடத்தை அல்லது கதையைப் படியுங்கள்.
- இந்த வேதப்பகுதியானது தேவனைக் குறித்தும், இயேசுவைக் குறித்தும் அல்லது அவருடைய திட்டடன்களைக் குறித்தும் என்ன கூறுகிறது என்பதை விவாதியுங்கள்.
- புதிய விசுவாசிகளுக்குப் பட்டய முறையைப் பயன்படுத்துங்கள்.

iii. **முன்னோக்கிப் பாருங்கள்:**
   - இன்றைய பாடத்தின் அடிப்படையில் நீங்கள் இவைகளுக்குக் கீழ்ப்படிவீர்கள்?
   - நீங்கள் கற்றுக்கொண்டவைகளை யாருக்கெல்லாம் நீங்கள் கற்றுக்கொடுப்பீர்கள்?

**e. தேவனுடைய முழு ஆலோசனைகளையும் கற்பியுங்கள். பால் உணவிலிருந்து மாம்ச உணவு திட்டம் (எபிரெயர் 5:11-14)**
   - தினசரி வேதவாசிப்பு மற்றும் வேததியானம் மற்றும் ஜெபம் ஆகிய பழக்கத்தை மேம்படுத்துங்கள்.
   - தேவனுடைய சத்தத்திற்கு செவிகொடுங்கள்.
   - தேவனுடைய சத்ததிற்குக் கீழ்ப்படியுங்கள்.
   - நீங்கள் கற்றுக்கொண்ட காரியங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளும் பழக்கத்தை மேம்படுத்துங்கள்.

## 21. திருச்சபைகளை நிறுவுதல்

**a. திருச்சபை என்றால் என்ன?**

திருச்சபை என்பது ஜெபத்திற்காகவும் ஆராதனைக்காகவும் பக்திவிருத்திக்காகவும், நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளுவதற்காகவும், சமுதாயத்திலுள்ள மக்களுக்கு சேவைசெய்வதற்காகவும் ஒழுங்கும் கிரமுமாகக் கூடிவருகிற விசுவாசிகளின் கூட்டமாகும்.

**b. ஒரு திருச்சபைக்குள் இருக்கவேண்டிய / நடக்கவேண்டிய மிக முக்கியமான காரியங்கள் யாவை?**

- ஜெபம் மற்றும் ஐக்கியம்
- பாடல்களாலும் வார்த்தைகளினாலும் கர்த்தரை ஆராதித்தல்.
- வேத வாசிப்பு, வேதபோதனை.
- சாட்சிகளைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் கர்த்தருக்குக் கொடுத்தல்
- ஒருவருக்காக ஒருவர் ஜெபித்தல்
- நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் தேவையில் உள்ள மக்களுக்கு சேவைசெய்தல்.

**c. திருச்சபையில் உள்ள தலைவர்கள் யார்?**

- அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், மேய்ப்பர்கள், சுவிசேஷகர்கள் (எபேசி 4:11-13)
- உதவிக்காரர்கள், மூப்பர்கள் (தீத்து 1:5, 1 தீமோ 3:8)

**d. நான் எப்படி ஒரு புதிய திருச்சபையைத் துவங்கமுடியும்?**

- கிரமமாகக் கூடிவரும்படி ஒரு இடத்தையும் நேரத்தையும் தீர்மானியுங்கள்.
- 2-3பேர் அல்லது அதற்க்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட எளிமையான திருச்சபைகளைத் துவங்குங்கள். "ஏனெனில், இரண்டு பேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" மத்தேயு 18:20.

- அனைவரும் தங்கள் தங்கள் பங்களிப்பை கொடுக்கும் திருச்சபையை உருவாக்குங்கள் (1 கொரிந்தியர் 14:26)
- உங்களது நபர்களை அதாவது நண்பர்கள், உறவினர்கள், சக மனிதர்கள், அண்டைவீட்டார் ஆகியோருக்கு அழைப்புக் கொடுங்கள்.
- இயேசு கற்பித்தவைகளுக்கும் கட்டளையிட்டவைகளுக்கும் கீழ்ப்படிம்படிக்கு திருச்சபை அங்கத்தினர்களை சீஷராக மாற்றுங்கள்.
- ஒவ்வொரு விசுவாசிகளையும் கீழ்ப்படிதலுள்ள சீஷர்களாகவும் சீஷர்களை உருவாக்குகிறவர்களாகவும் மாற ஊக்கப்படுத்துங்கள்.
- விசுவாசிகள் முதிர்ச்சியடைந்த சீஷர்களாக மாறியபின்பு புதிய திருச்சபைகளை ஸ்தாபியுங்கள்.

**e. நான் எந்த மாதிரியான திருச்சபையைத் துவங்கமுடியும்?**

- முயல்களைப் போல எளிமையாகப் பெருக்கமடைகிற, மறு உற்பத்திசெய்கிற, சீஷர்களை உருவாக்குகிற திருச்சபைகளை ஸ்தாபியுங்கள்.
- ஒவ்வொரு திருச்சபையும் மறுஉற்பத்தி செய்கிற சபையாக இருக்கவேண்டும்.
- முதிர்ச்சியடைந்த ஒவ்வொரு விசுவாசியையும் ஒரு புதிய திருச்சபையை உருவாக்க உற்சாகப்படுத்த வேண்டும்.

**22. தலைவர்களை உருவாக்குதல்:**

**a. ஒரு திருச்சபையை நான் எவ்வாறு பயிற்சி மையமாக மாற்றமுடியும்?**

- முதிர்ச்சியடைந்த விசுவாசிகளை அடையாளம்கண்டு அவர்களை முறையான பயிற்சித்திட்டத்தில் இணையுங்கள்.
- ஒவ்வொரு புதிய ஏற்பாட்டுத் திருச்சபையும் சுவிசேஷ வேலைச் செய்வதற்காக பரிசுத்தவான்களை உருவாக்குகிற பயிற்சிமையங்களாக இருக்கவேண்டும்.
- ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட முறையான பயிற்சிக்கான பாடத்திட்டத்தைப் பெறுங்கள்.
- வாரத்திற்கு ஒருமுறையோ அல்லது இரண்டுமுறையோ அல்லது மாதத்திற்கு ஒரு முறையோ பயிற்சி வகுப்புக்களைத் துவங்குங்கள் (மாணவர்களுடைய போக்குவரத்து மற்றும் நேரம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு வகுப்பு நடத்தும் நாளைத் திட்டமிடுங்கள்).
- கீழ்ப்படிதலை அடிப்படையாகக்கொண்ட கற்றலை வலியுறுத்துங்கள்.
- **கீழ்ப்படிதலுள்ள** சீஷர்கள் மற்றும் தலைவர்களைக் கொண்டு நடத்துங்கள்.
- பயிற்சிபெரும் ஒவ்வொருவரும் கீழ்ப்படியவும் மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கவும் உற்சாகப்படுத்துங்கள்.
- நீங்கள் கூடிவரும் ஒவ்வொரு முறையும் கணக்கொப்புவிக்கும் கேள்விகளைக் கேளுங்கள்.

**23. திருச்சபை நிறுவும் இயக்கம் என்றால் என்ன?**

**திருச்சபை நிறுவும் இயக்கம் (CPM - Church Planting Movement)** என்பது உள்ளூர் திருச்சபைகளானது அதிவேகமாகவும் மிகப் பரவலாக வளரக்கூடியதும், குறிப்பிட்ட மக்களினங்கள் அல்லது குறிப்பிட்ட மக்கள்தொகை கொண்ட பகுதிகளில் திருச்சபைகளை நிறுவுவதாகும். இது திருச்சபைகளை நிறுவும்படியாக மக்களுக்குப் பயிற்சியளிக்கிற நபர்களுக்குப் பயிற்சியளிக்கிற நபர்கள் கீழ்ப்படிதலுள்ள சீஷர்களாக மாறுவதற்கான பயிற்சிக்கோட்பாடுகளை அடிப்படியாகக் கொண்டதாகும். நீங்கள் வெறும் ஒரே ஒரு திருச்சபையை ஸ்தாபிப்பதைவிட திருச்சபைகளை ஸ்தாபிப்பதற்கு மற்றவர்களுக்குப் பயிற்சியளிப்பவர்களுக்கு பயிற்சியளிப்பது வலியுறுத்தப்படுகிறது. **குறைந்தபட்சம் நான்கு தலைமுறைகளைக் கொண்ட திருச்சபைகளை ஸ்தாபிக்க உற்சாகப்படுத்துங்கள்.**

**24. சீஷர்களை உருவாக்கும் இயக்கம் என்பது என்ன?**

சீஷர்களை உருவாக்கும் இயக்கம் (DMM- Disciple Making Movement) என்பது சீஷர்களை உருவாக்கும் சீஷர்களை அதிவேகமாகவும் எண்ணிக்கையில் பெருக்குவதாகும். இதில் ஒவ்வொரு விசுவாசியும் சீஷர்களை அதிகளவில் உருவாக்குகிற கீழ்ப்படிதலுள்ள சீஷர்களாக ஆக்குவதில் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது. அவர்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்து தாங்கள் கற்றுக்கொண்டதை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுப்பார்கள். ஒவ்வொரு சீஷர்களும் சீஷர்களை உருவாக்குகிறவர்களாகவும், வளர்ந்து பெருகுகிற திருச்சபைகளை ஸ்தாபிக்கிறவர்களாகவும் இருப்பார்கள். குறைந்தபட்சம் நான்கு தலைமுறைகளைக் கொண்ட சீஷர்களை உருவாக்க உற்சாகப்படுத்துங்கள்

**DMM ஆனது சீஷர்கள் சீஷர்களை உருவாக்குவதையும், CPM ஆனது திருச்சபைகள் திருச்சபைகளை உருவாக்குவதையும் முக்கியத்துவப்படுத்துகின்றன**

**25. சீஷர்களை உருவாக்குதல் என்றல் என்ன?**

“சீஷர்களை உருவாக்குதல் என்பது, ஒவ்வொரு விசுவாசியும் மற்றவர்கள் இயேசுவை அறிந்துகொள்ளவும், வளரவும், உண்மையாக இயேசுவைப் பின்பற்றவும் அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கும், உற்சாகப்படுத்துவதற்கும், தனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தும் திட்டமிடப்பட்ட, ஐக்கியமாக செயல்படுகிற செயல்பாடாகும்.

**26. கீழ்ப்படிதலை அடிப்படையாகக் கொண்ட சீஷத்துவம் என்றால் என்ன?**

கீழ்ப்படிதலை அடிப்படையாக கொண்ட சீஷத்துவம் என்பது இயேசு கிறிஸ்துவின் அனைத்துக் கட்டளைகளுக்கும் உபதேசங்களுக்கும் கீழ்ப்படிகிற ஆரம்பநிலை கீழ்ப்படிதலை முக்கியத்துவப்படுத்துகிறது. **ஒரு நபர் முதிர்ச்சியுள்ள விசுவாசியா என்பது அவர் எந்த அளவு அறிவு நிறைந்தவர் என்பதன் அடிப்படையில் அல்ல, மாறாக அவர் எந்த அளவு கீழ்ப்படிகிறார் என்பதை பொறுத்து அமைகிறது**. இயேசு கிறிஸ்து, "நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, அவர்களுக்கு ஞானஸ்நானம்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்குப் போதியுங்கள்" என்றார். எனவே ஒவ்வொரு விசுவாசியும் சீஷராகவும் சீஷர்களை உருவாக்குகிறவராகவும் இருக்கவேண்டும்.

**27. மாபெரும் கட்டளையின் பணியானது நிறைவேற்றப்பட்ட பின்பு எப்படியிருக்கும்?**

- வெளிப்படுத்தல் 7:9*ல் "சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும்...திரளான கூட்டமாகிய ஜனங்கள்.... சிங்காசனத்திற்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்" என்று கூறுகிறது.*
- தானியேல் 7:14 *"சகல ஜனங்களும், ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி..." என்று கூறுகிறது.*
- மத்தேயு 24:14 *"ராஜ்ஜியத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல*

*ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்" என்று சொல்கிறது.*

**28. மாபெரும் கட்டளையை நிறைவேற்றுவதற்கு எளிமையான விளக்கங்கள்:**

- **a.** ஒரு நபரும் விடுபடக்கூடாது, ஒரு இடமும் விடுபடக்கூடாது, ஒரு மொழியும் விடுபடக்கூடாது, ஒரு மக்களினமும் விடுபடக்கூடாது
- **b.** மக்களினம், மொழி அடிப்படையிலான மக்கள், நகர்ப்புற மக்கள், கிராம மக்கள் (PLUG அணுகுமுறை)
- **c.** ஒவ்வொருவரும் விசுவாசி, அனைவருக்கும் சரீரமாகிய திருச்சபை, அனைத்து மொழிகளிலும் வேதாகமம், மலைகளை அசைக்கும் ஜெபம் (4 B அணுகுமுறை)

**29. மாபெரும் கட்டளையின் பணியை முற்றிலுமாக நிறைவேற்றி முடிக்கமுடியுமா?**

**டி.எல். மூடி இவ்வாறு கூறினார்**, *"இதை நிறைவேற்றமுடியும், இது நிறைவேற்றப்படவேண்டும், இது நிறைவேற்றப்பட்டே ஆகவேண்டும்".*

***இதை மிக விரிவாகப் படிக்கவிரும்பினால், online at learnnn.com ஆன்லைனில் நடத்தப்படும் மாபெரும் கட்டளையின் பள்ளியின் பயிற்சி வகுப்பில் உங்களது பெயரைப் பதிவுசெய்யுங்கள்.***

# ABOUT THE GREAT COMMISSION HANDBOOK

This Great Commission Handbook is a simple guide for understanding the last commandment of Jesus. This may be used for teaching every believer in the church so that they can participate in the great commission and also grow in Christian maturity.

The purpose of this handbook is to give a general overview of the Great Commission and not to give a detailed description of each of the points discussed. All the trainees are encouraged to read the Bible references mentioned and learn by-heart. These references are considered as some of the basic Bible verses for every believer to know.
The trainers may use this book as a simple guide for teaching their members of their church or community or their discipleship group using a participatory approach.

The whole purpose of this training is to make obedient disciples who will obey every commandment of Jesus and be committed to training others.

Go ye therefore, and teach all nations, baptizing them in the name of the Father, and of the Son, and of the Holy Ghost: Teaching them to observe all things whatsoever I have commanded you: and, lo, I am with you always, even unto the end of the world.

**Matthew 28:19-20**

***https://schoolofgreatcommissionglobal.learnrn.com/the-school-of-great-commission***